Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC 177/2024** |
| Deposition of witness for | :: | **PW. 4** |
| Name | :: | **நாகேந்திரன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**01.04.2026**

**முதல் விசாரணை**:

1. நான் இராமனுஜபுரத்தில் குடியிருந்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்திலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். தேதி சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி கையெழுத்தை இராமனுஜபுரம் பேருந்து நிறுத்ததில் வைத்து ஒருவருடத்திற்கு முன்பு செய்து கொடுத்தேன். அப்போது விபத்து நடந்த இடத்தில் பார்வையிட்டு போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதற்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் சேர்ந்து ரவிசந்திரன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கில் காயம்பட்ட நபரான பாண்டி எனக்கு என்ன உறவு என்றால் எனது ஊர்க்காரரர் ஆவார். நான் கையெழுத்து செய்து கொடுத்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் வரைபடத்திற்கு கீழே கையொப்பம் செய்தேன். நான் எத்தனை மணிக்கு

பார்வை மகஜரில் எனது கையொப்பத்தை செய்து கொடுத்தேன் என்றால் மாலை சுமார் 06.00 மணியளவில் செய்து கொடுத்தேன். காயம்பட்ட நபரான பாண்டி எனது ஊர்க்காரர் என்ற காரணத்தினால் நான் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் கையெழுத்து செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து செய்து கொடுத்ததாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC 177/2024** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **பாண்டி** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**01.04.2026**
**முதல் விசாரணை**:

1. நான் இராமனுஜபுரத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 01.06.2024 ம் தேதி இரவு சுமார் 08.00 அல்லது 08.30 மணியளவில் அருப்புக்கோட்டையில் இருந்து வந்து இராமானுஜபுரத்தில் பேருந்தில் இருந்து இறங்கி ஊருக்குள் செல்வதற்காக சாலையை கடக்க நான் சென்றபோது மதுரை சாலையில் இருந்து என்னை நோக்கி வந்த இருசக்கர வாகனம் என்மீது மோதியது. விபத்து நடந்த சமயத்தில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இருந்தது. அதனால் விபத்து நடந்த இடம் இருட்டாக இருந்தது. என்மீது மோதிய இருசக்கர வாகனத்தில் முகப்பு விளக்கு இல்லை. இருசக்கர வாகனத்தில் முகப்பு விளக்கு இருந்திருந்தால் இருசக்கர வாகனம் வருவது எனக்கு தெரிந்து இருக்கும். விளக்கு இல்லாத காரணத்தினால் இருசக்கர வாகனம் வந்தது எனக்கு தெரியவில்லை. அதனால் தான் விபத்து ஏற்பட்டது.

2. விபத்தில் எனக்கு நெற்றியிலும், வலது காலில் முழங்காலுக்கு கீழும், இரண்டு கால் முட்டியிலும் அடிபட்டது. வலது காலில் எலும்பு முறிவிற்காக எனக்கு அறுவை சிகிச்சை செய்து முழங்காலுக்கு கீழே

பிளேட் வைத்துள்ளார்கள். அடித்த உடனே நான் மயங்கி கீழே விழுந்துவிட்டேன். அதனால் யார் இருசக்கர வாகனத்தை ஓட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. மறுநாள் எனது மகன்கள் தான் கல்குறிச்சி அருகே உள்ள சமத்துவபுரத்தில் உள்ள ஒருநபர் தான் விபத்தை ஏற்படுத்தியதாக என்னிடம் கூறினார்கள்.

3. விபத்து நடந்த உடனே என்னை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். பின்னர் மதுரைக்கு செல்லாமல் என்னை அருப்புக்கோட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையான பழனிவேல்ராஜன் மருத்துவமனையில் அனுமதித்தார்கள். அங்கு நான் சுமார் 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்து நடந்த பிறகு எப்போது எனக்கு மயக்கம் தெளிந்தது என்றால் அன்றைய தினமே பழனிவேல்ராஜன் மருத்துவமனைக்கு வந்தபிறகு மயக்கம் தெளிந்தது. விபத்து நடந்தபோது எதிரியின் இருசக்கர வாகனத்தில் முகப்பு விளக்கு இல்லை என்று நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தினை போலீசார் விசாரணையின்போது நான் கூறினேனா என்றால் நான் வீட்டில் இருந்தபோது ஒருநாள் போலீசார் வந்து வீட்டிற்கு வெளியே நின்று கொண்டு என்ன நடந்தது என்று எனதுமனைவியிடம் கேட்டார்கள், என்னிடம் நேரடியாக என்ன நடந்தது என்று போலீசார் கேட்கவில்லை, கையெழுத்து மட்டும் வாங்கினார்கள். அதனால் அவர்களிடம் நான் சொல்லவில்லை.

2. நான் நெடுஞ்சாலையில் சாலையை கடக்க கூடாத இடத்தில் சாலையை கடக்க முயற்சி செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, எங்கள் ஊர்மக்கள் அனைவரும் பேருந்தில் இருந்து இறங்கிய உடன் அந்த இடத்தில் தான் சாலையை கடப்பார்கள். விபத்து நடந்த போது எனக்கு என்ன வயது என்றால் சுமார் 60 இருக்கும். வயதின் காரணமாக எனக்கு கண்பார்வை குறைவால் நான் இருசக்கர வாகனத்தை கவனிக்காமல் சாலையை கடக்க முயற்சித்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, எனக்கு கண்பார்வையில் எந்த குறையும் இல்லை.

நான்  தான் விபத்திற்கு காரணம் என்றாலும்,  எதிரி விபத்திற்கு காரணம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**